
# ஓ, நான் அந்த பரபாஸாயிருந்தேன். மரிக்கிறதற்கு பாத்திரவானாயிருந்தவன் நான், அவரோ ன்னுடைய ஸ்தானத்தை டுத்துக்கொண்டார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: 60-12-11M பத்து கன்னிகைகள்

---

**285.** அதை உங்களால் கற்பனை செய்து பார்க்கமுடிகிறதா? அவரது இரத்தத்தை சிந்த வேண்டுமென்று, அவரது சொந்தப் பிள்ளைகளே கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர்.

வானங்களையும், பூமியையும் சிருஷ்டித்தவர், பூமியிலிருந்து அவர் முளைத்தெழும்பச் செய்த மரத்தினால் உண்டாக்கப்பட்ட சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தார்; அவரது சொந்தப் பிள்ளைகள்!

(பிதாக்களே, உங்கள் பிள்ளைகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள், உங்கள் சொந்தப் பிள்ளைகள்). அவருக்கெதிராகக் கூக்குரலிட்டு, “அவனை அகற்றும்,

கள்ளனாகிய அந்தப் பரபாஸை விடுதலையாக்கும்” என்றார்கள்.

**286.** ஓ, நான் அந்த பரபாஸாயிருந்தேன். மரிக்கிறதற்கு பாத்திரவானாயிருந்தவன் நான், அவரோ என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார்.

சிறையில் அந்த பரபாஸ் என்பவன் இருந்தபொழுது, அங்கே அந்த நூற்றுக்கதிபதி மிகுந்த ஓசையோடு நடந்து வந்து கதவைத் திறந்தபொழுது, பரபாஸ் எவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்திருப்பான்?

“இன்னும் சிறிது நேரத்தில் நான் மரித்துப்போய்விடுவேன், நான் ஒரு கொலைக்காரன், நான் ஒரு திருடன். இன்று என்னை அவர்கள் கொன்றுவிடப் போகிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்பதை அறிவேன். இன்று பஸ்கா தினமாகும், எனவே நான் உண்மையிலேயே... நான் இன்று மரிப்பேன் என்று அறிவேன்” என்று பரபாஸ் தனக்குள் சொல்லிக் கொண்டிருந்தான்.

முந்தின இரவு முழுவதும் நடுங்கினவனாக காணப்பட்டான். நிம்மதியற்ற எந்தவொரு பாவியையும் போல அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான்.

முதலாவதாக, அங்கே அந்த காவலாளி வருகிறான். அப்பொழுது பரபாஸ், “ஓ, ஓ, இதோ இவன் வந்துவிட்டான், நான் போய்விடவேண்டும்” என்றான்.

அப்பொழுது சாவியைப் போட்டு க்ளிக் என்று காவலாளி கதவைத் திறந்தான்.

காவலாளி அட்டென்ஷனில் நின்று, “பரபாஸே, வெளியே வா” என்று அழைத்தான்.

“ஊ ஊ, ஆம், நான் போகவேண்டும் என்பதை அறிவேன். நான் போய்க்கொண்டிருக்கிறேன்” என்றான் பரபாஸ்.

“நீ போகலாம், உனக்கு விருப்பமானபடி செய்துகொள்ளலாம்” என்றான் காவலாளி.

“என்ன?” என்றான் பரபாஸ்.

“நீ விடுதலையாயிருக்கிறாய், நீ வெளியே போகலாம், நீ போய் உனக்கு விருப்பமானபடி செய்து கொள்” என்றான்.

**287.** “நான் விடுதலையாகிவிட்டேனா? நீரல்லவா எனக்கு மரண தண்டனை அளித்தீர்” என்றான்.

தேவன் அனைத்து பாவிகளையும் மரணாக்கினைக்குள்ளாக்குகிறார்.

“நீர் எனக்கு மரண தண்டனை விதித்துள்ளீரே, அப்படியிருக்க நான் எப்படி விடுதலையாகி போகமுடியும்?” என்று பரபாஸ் கேட்டான்.

**288.** “இங்கே வா பரபாஸ், அதோ அங்கே அவர் அந்த மலையின் மேல் ஏறிச் செல்வதைப் பார், சிலுவை கல்லின் மேல் மோதும் போது உண்டாகும் சத்தத்தைக் கேள். அவருடைய கைகளில் அவர்கள் ஆணியறைவதனால் உண்டாகும் சத்தத்தைக் கவனி, அங்கே கதறுகிற அவரை நோக்கு, அவர் முகத்தில் உப்பான கண்ணீரும், இரத்தமும் கலந்து காணப்படுகிறதை பார்.

பரபாஸே, உனது ஸ்தானத்தை அவர் எடுத்துக்கொண்டார். அவர் உனக்காக மரித்தார்"

"நான் விடுதலையாவதற்காக அவர் மரித்தான் என்றா கூறுகிறீர்கள்"

"ஆம்"

**289.** "ஓ நல்லது, நான் மறுபடியும் கொலை செய்ய ஆரம்பிப்பேன்." ஓ, என்னே ஒரு நன்றியற்றவன். நீ, நீ மரிப்பதற்கு பாத்திரமானவன்.

**290.** மகிமையின் அதிபதி மரித்த அவ்வற்புத சிலுவையை நான் காண்கையில், என்னுடைய பெருமையெல்லாம் வீண் நஷ்டம் தான். ஓ, என்னே! கவிஞன் இவ்வாறு பாடியது ஒன்றும் ஆச்சரியம் அல்ல.

அவர் உயிரோடிருந்து என்னை நேசித்தார், மரித்து என்னை இரட்சித்தார்,

அடக்கம் பண்ணப்பட்டு, அவர் என் பாவங்களை சுமந்து தொலைவில் அகற்றினார்,

உயிர்த்து, இலவசமாக என்னை என்றென்றைக்குமாக நீதிமானாக்குகிறார்

ஓர் நாளில் அவர் வருவார், ஓ அது மகிமையான நாளாயிருக்கும்.

**291. அவர் எனக்காக செய்ததை நான் காண்கையில், அவரை நான் எவ்வாறு புறக்கணிக்க முடியும்? நான் எங்ஙனம் அதைச் செய்வேன்?**

பூமியில் எனக்குள்ள நபர் யாவரையும் இழந்துவிட நான் விரும்புவேன்.

ஸ்தாபனங்களால் நான் உதைத்து எறியப் படவும், யாவற்றாலும் உதைத்து எறியப்படவும் ஆயத்தமாயிருப்பேன்.

நான் அங்கே நோக்கிப் பார்க்கையில், நான் மரணாக்கினைக்குள்ளாக்கப்பட்டிருக் கையில், அவரோ என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டுவிட்டார்.

நிச்சயமாக, கர்த்தாவே, யாற்றையும் வீண் நஷ்டமென்று நான் எண்ணுகிறேன்.

**ஓ, நான் சிலுவையை தழுவிக்கொள்ளட்டும். கர்த்தாவே.**

கன்மலைகள் இரண்டாகப் பிளந்தன, ஆகாயங்கள் இருண்டன,

இரட்சகர் தலையை சாய்த்து மரித்தார், அப்பொழுது

திரைச்சீலை கிழிந்து வழியை வெளிப்படுத்தியது

பரலோகத்தின் மகிழ்ச்சிக்கும், முடிவற்ற நாளுக்கும்.

**292.** **ஓ, இயேசுவே, நான் உம்மண்டையில் நெருங்கி தங்கியிருக்கட்டும்.**

**உமது பக்கத்திலிருந்து என்னை அகற்றிவிடாதேயும், இரத்தம் வடியும் உமது ஐங்காயங்களை நான் காணட்டும். ஓ பரலோகத்தின் அதிபதியே! எப்படியாக அவர் எனக்காக மரித்தார்! நான் பிழைக்கும்படியாக அவர் மரித்தார்.**

**293.** ஆக்கினைக்குட்படுத்தப்பட்ட ஒருவன்... பாவ சங்கிலியால் நரகத்தின் சிறையில் வைக்கப்பட்டிருந்த, ஆக்கினைக்குட்படுத்தப்பட்ட, குற்றமுள்ளவனாக, என்றென்றும் அழிந்துபோயிருக்கும்படியாக இருந்தேன். ஒருவர் என்னுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். அதன்பிறகு அவர்கள்...

இங்கே நான் 18 அல்லது 20 வயதினனாக இருக்கையில், ஒரு நாளிலே பரிசுத்த ஆவியானவர்... நான், "நான் யார், நான் எங்கிருந்து வந்தேன், எங்கே போகிறேன்?" என்று கூறினேன்.

**294.** அவர் கூறினார், "அவர் உனது ஸ்தானத்தை எடுத்துக் கொண்டார். நீ அங்கே போய்க் கொண்டிருந்தாய். அவர் உன் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார். அவர் அங்கே இருக்கிறார்" என்று.

**295.** "ஓ தேவ ஆட்டுக்குட்டியே, ஓ தேவ ஆட்டுக்குட்டியே, நான் வருகிறேன், நான் வருகிறேன். வெறுங்கையனாக நான்

வருகிறேன், உமக்குக் கொடுக்க என்னிடத்தில் ஒன்றுமில்லை. உம்முடைய சிலுவையை நான் பற்றிக்கொள்கிறேன். கர்த்தாவே, என்னிடம் இருப்பதெல்லாம் அது மாத்திரமே" என்று நான் கூறினேன்.

அவர் என்னை உள்ளே எடுத்துக்கொண்டார்.

கெட்ட குமாரனை அவனது தந்தை உடுத்துவித்தது போல், என்னையும் உடுத்துவித்தார்.

புத்தாடையை எனக்கு உடுத்துவித்தார்.

அது என்னுடைய ஆடையல்ல, அது அவருடைய நீதியாகிய வஸ்திரமே, அதைக் கொண்டு என்னை உடுத்துவித்தார்.

ஒரு விவாக மோதிரத்தை, அந்நாளில் நான் மணவாட்டியோடு இருக்கத்தக்கதாக, என் விரலில் அணிவித்தார்.

இப்பொழுது கொழுத்த கன்று அடிக்கப்பட்டிருக்கிறது.

**நாம் இப்பொழுது களிகூர்ந்து கொண்டிருக்கிறோம், ஏனெனில், நான் முன்பு மரித்திருந்தேன், இப்பொழுதோ உயிர்த்து விட்டேன். காணாமற்போனேன், இப்பொழுதோ கண்டுபிடிக்கப்பட்டேன்.**

ஆச்சரியமான கிருபை, அதன் சப்தம் இனிமையானது,

அது பாவியான என்னையும் இரட்சித்தது **(பரபாஸை விட மோசமான நான்)**

நான் காணாமற்போனேன், இப்பொழுதோ கண்டுபிடிக்கப்பட்டேன்.

நான் குருடனாயிருந்தேன், இப்பொழுதோ காண்கிறேன்.

பயந்திருக்க எனக்குப் கற்பித்தது கிருபையே

அச்சம் யாவும் தீர்த்ததுவும் கிருபையே

நான் முதலில் விசுவாசித்த வேளையிலே

கிருபையானது எத்தனையாய் விலையேறப் பெற்றதாய் காணப்பட்டது!

பதினாயிரம் ஆண்டுக் காலங்களாக நாம் அங்கே இருக்கிற வேளையில்,

சூரியனைப் போல் பிரகாசமாயிருந்த

**(இனி நட்சத்திரங்களே இல்லை, ஆனால் சூரியன்தான்)**

நாம் ஆதியில் ஆரம்பித்ததை விட,

அவரைத் துதித்துப் பாடிட நமக்கு நீண்ட காலம் உண்டாயிருக்கும்

**(நாம் அப்பொழுது நித்தியத்தில் இருக்கிறோம்).**

**296.** ஒ, நான் எவ்வளவாய் இயேசுவை நேசிக்கிறேன். ஏனெனில் அவர் என்னில் முந்தி அன்பு கூர்ந்தார். ஒ எவ்வளவு அற்புதமானது!